# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.82/2025

**Deposition of Witness for Prosecution PW 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பெரியார் | Father's Name | : | முத்தையா |
| Village | : | உலகம்பட்டி | Taluk | : | சிங்கம்புனரி |
| Calling | : | | Age | : | 52 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 06th day of March 2026.**

**(A2 to A4 present. A1 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது உலகம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். உதவி ஆய்வாளர் கலைச்செல்வன் ஹரித்துவாரமங்கலம் காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது 20.05.2017 அன்று கும்பகோணம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று வலங்கைமான் தாலுகா, வடக்குபட்டத்தை சேர்ந்த வீரன் மகன் மாரியப்பன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.06 16:43:23 +0530

**அ.சா.ஆ.3**. நிலையம் திரும்பி காலை 8.30 மணிக்கு ஹரித்துவாரமங்கலம் காவல் நிலைய கு.எண் 27/2017, இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2), 436 ன்படி நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.4**. எனது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.05.2017 அன்று காலை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகேந்திரன், செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5**. காயம்பட்ட மகாதேவன், சின்னையன், மாரியப்பன் ஆகியோர்களுக்கு 19.05.2017 அன்று கும்பகோணம் அரசு மருத்துவமனையில் டாக்டர் வைதேகி வழங்கிய காயச் சான்றுடன் கூடிய விபத்து பதிவேடுகள் முறையே **அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8**. 20.05.2017 அன்று சாட்சிகள் மாரியப்பன், தியாகராஜன், மகேந்திரன் ஆகியோர்களை விசாரித்தும் 30.03.2018 அன்று சாட்சிகள் ராணி, மகாதேவன், சின்னையன், மகாலெட்சுமி, சக்திவேல் ஆகியோர்களை விசாரித்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 30.10.2018 அன்று காயம்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்த டாக்டர் வைதேகியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்று பெற்றேன். 24.09.2021 அன்று சாட்சி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.06 16:43:29 +0530

செல்வராஜை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 24.09.2021 அன்று எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) , 436 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் மாரியப்பன், ராணி, மகாதேவன், தியாகராஜன், சக்திவேல், மகாலெட்சுமி ஆகியோர் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலங்களாக பதிவு செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் எந்தவித குற்ற செயலிலும் ஈடுபடு வில்லை எனவும் வழக்கு சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த தொடர்புமில்லை எனவும் சொன்னால் தவறு. புகார்தாரர் கொடுத்த தவறான புகாரினை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.06 16:43:37 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.